




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
# பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 23.02.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்







We Shine Academy™

# தேசிய நிகழ்வுகள்

- நாட்டில் உள்ள **'வளர்ந்து வரும் மாவட்டங்களில்'** மருத்துவமனைகளுடன் இணைந்த **75 மருத்துவக் கல்லூரிகளை அமைக்க மத்திய அரசு அனுமதி** வழங்கியுள்ளது என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தெரிவித்தார்.
    - மகாராஷ்டிரத்தின் ராய்கட் மாவட்டத்தில் உள்ள தேசிய பொது சுகாதாரப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய கட்டடங்களை ஹர்ஷ்வர்தன் பிப்ரவரி 22 அன்று திறந்துவைத்தார்.
    - **செய்தி துளிகள்**
        - கடந்த 57 ஆண்டுகளில் நாடு முழுவதும் 82 நவீன மருத்துவக் கல்லூரிகள் மட்டுமே அமைக்கப்பட்டன.
        - மத்திய அரசு செயல்படுத்தி வரும் 'ஆயுஷ்மான் பாரத்' உள்ளிட்ட சுகாதாரத் திட்டங்களின் மூலம் அனைத்து மக்களுக்கும் சுகாதார சேவைகளை வழங்க மேலும் 500 நவீன மருத்துவமனைகளை அமைப்பது அவசியமாக உள்ளது.

- நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களையும் இணையவழியில் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

- **தில்லியில் 'சர்வதேச நீதித்துறை மாநாடு-2020'** தொடக்க நிகழ்ச்சி பிப்ரவரி 22 அன்று நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி, **உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே, மத்திய சட்டத்துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்** மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

- இந்தியாவில் அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளும்போது, **மதச் சுதந்திரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியிடம் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பேச்சுவார்த்தை நடத்துவார்** என்று **வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது**.
  - சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி நடைபெறுவதை இந்தியாவும், அமெரிக்காவும் உறுதி செய்து வருகின்றன. இந்தியாவின் மக்களாட்சிக்கு அமெரிக்கா உரிய மதிப்பளிக்கிறது. பாரம்பரிய சிறப்பு கொண்ட மக்களாட்சியைக் காப்பதற்குத் தேவையான ஊக்கத்தை இந்தியாவுக்கு அமெரிக்கா தொடர்ந்து வழங்கும்.
  - **செய்தி துளிகள்**
    - 1812 யுத்தத்தின் போது, 1814 இல் இதன் சுற்றுச்சுவர் தவிர மற்ற அனைத்து பகுதிகளும் தீ விபத்தால் பாதிக்கப்பட்டது. எனவே அதன் பிறகு வெள்ளை மாளிகை மீண்டும் கட்டப்பட்டது

- **பிரதமரின் விவசாயிகள் உதவித் தொகை திட்டத்தின் கீழ்**

இதுவரை **8.46 கோடி விவசாயிகள் பலனடைந்துள்ளனர்** என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் ரூ.50,850 கோடி தொகை விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 4 மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2,000 வீதம் ரூ.6,000 உதவித் தொகை விவசாயிகள் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.
- **செய்தி துளிகள்**
  - கடந்த 2018-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இந்தத் திட்டம் அமலுக்கு வந்தது. வருமான வரி கட்டிவரும் வசதி படைத்த விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பலன் பெற முடியாது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **டெஸ்ட் போட்டியில் அதிக ரன்கள்** - கங்குலியை முந்தினார் **விராட் கோலி**
  - டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நடைபெற்று வருகிறது.
  - போட்டியின் மூன்றாம் பிப்ரவரி 23 அன்று விராட் கோலி 11 ரன்கள் எடுத்தபோது, டெஸ்ட் போட்டிகளில் அதிக ரன்கள் அடித்த இந்திய வீரர்கள் பட்டியலில் சவுரவ் கங்குலியை முந்தினார். அவர் 7,223 ரன்கள் எடுத்துள்ளார்.
  - **செய்தி துளிகள்**

- இந்த பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் 15,921 ரன்களுடன் முதல் இடத்தில் உள்ளார். அவரை தொடர்ந்து, ராகுல் டிராவிட் 13,265 ரன்களுடனும், சுனில் கவாஸ்கர் 10,122 ரன்களுடனும், விவிவி எஸ்.லட்சுமண் 8,781 ரன்களுடனும், சேவாக் 8,503 ரன்களுடனும் உள்ளனர். விராட் கோலியை தொடர்ந்து சவுரவ் கங்குலி 7,212 ரன்களுடன் உள்ளார்.

## திருக்குறள்

**குறள்: 117**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம்: நடுவு நிலைமை

**கெடுவாக வையாது உலகம் நடுவாக**

**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு**

**விளக்கம்:** நடவுநிலைமை தவறாத அறநெறியை மேற்கொண்டொழுகும் ஒருவன் அடையும் வறுமையை அறிவுடையோர் தாழ்வாகக் கருதமாட்டார்.